RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s748

OPEN ACCESS

# கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் சமூகப் பிரச்சினைகள் மற்றும் சடங்குகள்

**மு. பரமேஸ்வரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, சென்னை-600017, தமிழ்நாடு, இந்தியா.

# The Theme of Social Issues and Rituals in Vairamuthu's the Saga of the Drylands

**M. Parameswari** [a, *]

[a] Department of Tamil, Shri Shankarlal Sundarbai Shasun Jain College for Women, Chennai-600017, Tamil Nadu, India

* Corresponding Author: parameswari@shasuncollege.edu.in

Received: 14-12-2021
Revised: 30-04-2022
Accepted: 07-05-2022
Published: 30-07-2022

**ABSTRACT**

The novel 'The Saga of the Drylands' written by Vairamuthu is notable among regional novels written in Tamil. It was published in 2001 and won the Sahitya Akademi Award from the Government of India in 2003. In the 1950s, when the Vaigai dam was constructed in Madurai District, 14 villages (Kallipatti, Kamakapatti, Karattupatti, Pinnadevanpatti, Vadamalai Nayakkanpatti, Savadipatti, Pasukaranpatti, Sekanuru, Metturu, Chakrapatti, Kuruviyapanpatti, Pannyanveedu) were forced to migrate from their native land. It talks painfully about the struggle of the people who depended on their soil. The story points to the lives of people who lived on the dry land of Kallikkadu. It portrays the tears, blood and pain of the villager Peya thevar, who lived on the Karisal land, which lies submerged in the Vaigai dam. He did not have any support from God or Government. He takes care of the birth of a cow and finally ends with his death. When the projects are implemented for the common good cause also villages are destroyed due to the construction of a new dam. People faced many problems like hunger, poverty, and their future dreams. The life of the village folks who have spent all their hard work on the land, but now they are exiled from place to place where they have lived as a family for generations. This study reveals the problems and rituals found in Kallikattu.

**Keywords:** Community Groups, Kallikkadu, Marriage, Dowry, Thiruneeru

## முன்னுரை

காலந்தோறும் மக்களிடையே பல்வேறு பிரச்சினைகளும் சடங்குமுறைகளும் புரையோடிக் கிடக்கின்றன. அவ்வகையில் கள்ளிக்காட்டு மக்கள் வாழ்க்கையில் காணப்படும் சமூகப் பிரச்சினைகளான ஆண், பெண் வேறுபாடு, கணவன் மனைவி உறவு, வரதட்சணை, சாதி வேறுபாடு, தீட்டுணர்வு பற்றியும் பிறப்பு, இறப்பு, திருமணம் பற்றிய சடங்குகளையும் ஆராயும் நோக்கில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

## ஆண், பெண் - வேறுபாடு

சமூகத்தில் ஆண், பெண் என்று தனித்தனி மதிப்புநிலைகள் காணப்படுகின்றன. பழங்காலம் முதல் இன்று வரை உடல் வலிமையாலும் பொருள் ஈட்டுதலாலும் ஆண்கள் உயர்வாகக்

கருதப்படுகிறார்கள். இன்றும் சமூகத்தில் ஆண்கள் மரபு உயர்வாகக் கருதப்பட்டு வருவதைக் காண்கிறோம். கிராமத்தில் இம்மரபு வலுவானதாக உள்ளது. கள்ளிக்காட்டு இதிகாசத்தில் இத்தகையச் சிக்கல்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இளம் விதவை செல்லத்தாய், ஒச்சுக்காளையை மறுமணம் செய்ய சம்மதித்த போது, செல்லத்தாயின் மகனான மொக்கராசுவிடம் செல்லத்தாயைப் பற்றித் தரக்குறைவாக அவனுடைய நண்பர்கள் கூறுவதைப் பின்வரும் கூற்றின் மூலம் அறிய முடிகிறது.

"அவுக வீட்டுக்கு இன்னொரு பால்மாடு வரப்போகுதில்ல; இவுக ஆத்தா ரெண்டாங்கல்யாணம் பண்ணப் போறாள்ல; பத்தாம்மாசம் பால் குடுக்கமாட்டா." என்று மறுமணம் செய்யும் செல்லத்தாயைப் பற்றிச் செல்லத்தாயின் மகன் மொக்கராசு பால் மாட்டிற்குப் புல் அறுக்கச் சென்ற போது அவனுடைய நண்பர்களான மோழையனும் கூழ்மாயியும் இழிவாகப் பேசுவதன் மூலம் மறுமணம் செய்யும் விதவையைச் சமூகம் ஏற்றுக் கொள்ளாமல் இழிவாகக் கருதுவதை உணர முடிகிறது (Vairamuthu, 2003).

கிராமங்களில் ஆண்பிள்ளை பெற்றுக் கொள்வதில் உள்ள விருப்பமும், பெண் பிள்ளையை விட ஆண்பிள்ளைகளிடம் அதிக உரிமை, அக்கறை மற்றும் பரிவு காட்டுவதையும் கள்ளிக்காட்டு இதிகாசம் எடுத்துரைக்கின்றது. ஆண் 'வரவு' என்றும் பெண் 'செலவு' என்றும் கருதுகின்றனர். பெண் குழந்தையின் பிறப்பைச் செலவென்றும் திருமணத்திற்குப் பிறகு தங்களை விட்டுப் பிரிந்து போய்விடுவர் என்பதைப் பேயத்தேவரின் பின்வரும் கூற்று புலப்படுத்துகிறது.

"செல்லத்தாயைக் கரைச் சேக்கறத்துக்குள்ளேயே செம்மம் முடிஞ்சிடும் போலிருக்கு. இதுல செல்லத்தாயி மக வேறயா? சரிபாப்பம்… உடம்புல உசிர் இருக்கு… ஒழைக்கத் தெம்பிருக்கு… உச்சியிலசாமி இருக்கு… என்று பெருமூச்சு விட்டுக் கொண்டார்" என்ற கூற்றின் மூலம் பேயத்தேவர் செல்லத்தாயிக்குப் பெண்குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையை எப்படித் திருமணம் செய்து கொடுப்பது என்று வருந்தும் நிலையைக் காண முடிகிறது (Vairamuthu, 2003).

## கணவன் - மனைவி உறவு

கிராமங்களில் கணவன், மனைவி உறவானது மனைவியின் வேலைத் திறனைப் பொறுத்தே அமைவதாகக் "கள்ளிக்காட்டு இதிகாசம்" சித்திரிக்கின்றது. கள்ளிக்காட்டு விவசாயக் கலாச்சாரத்தில் கணவன், மனைவி உறவு என்பது வெறும் உரிமைகளை முன்னிறுத்தி ஏற்படுவதல்ல. கடமைகளை முன்னிறுத்திக் கட்டப்படுவது. "மண்ணைக் கிண்டும் ஒருத்தனுக்கு வாக்கப்பட்ட வாழ்க்கை கட்டில் உற்பத்தியில் மட்டுமல்லாமல், காட்டின் உற்பத்தியிலும் அவள் வேர்வை விழுந்தாக வேண்டும்" என்ற கூற்றின் மூலம் கிராமப்புறங்களில் கணவன், மனைவி உறவு என்பது மனைவியின் உடல் உழைப்பைக் கொண்டே அமைகிறது என்பது புலனாகிறது (Vairamuthu, 2003). இதன் மூலம் கிராமியப் பெண்களின் நிலை இன்னும் மாற்றமடையவில்லை என்பது தெளிவாகிறது.

மேலும் பெண்கள் திருமணத்திற்கு முன்னே பெற்றோருக்கும் பின்னர் கணவருக்கும் கணவருக்குப் பின் பிள்ளைக்கும் அடங்கி நடக்க வேண்டும் என்று "மனு நீதி சாஸ்திரம்" குறிப்பிடுகிறது. சங்ககாலத்துக்கு முந்தைய நூலான மனுநீதி சாஸ்திரம் என்னும் வேதநூல் அக்காலப் பெண்களின் நிலையைக் குறிப்பிட்டிருந்தாலும் தற்காலப் பெண்கள் நிலையுடன் அது பொருந்திக் காணப்படுவது நோக்கத்தக்கது. பெண் தன் ஆசைகளை அழித்துக் கொண்டு தன் நலம் பேணாமல் பிறர் நலம் பேணுகின்றாள் (Annai Sri Aanantha Naachiyaramma, 2017).

"ராத்திரித் தாம்பத்யம் என்ற ஒன்றைத் தவிர குடித்தனத்தின் மற்ற அம்சங்களில் அவனுக்குப் பொறுமையில்லை. கல்யாணம் என்பது இன்னொரு உயிரின் மனது, உடம்பு, வயிறு மூன்றையும் திருப்தி செய்வது என்ற உண்மைகளோடு அவனால் ஒத்துப்போக முடியவில்லை. குருத்தெலும்பு முற்றாத ஒரு பெண்ணைக் கூட்டுக் கொண்டு வந்து அவளை எப்படிப் பாவிக்க வேண்டும் என்ற மெல்லிய அணுகுமுறை தெரியாதப் பேயப்பயல் அவன். மல்லிகைப் பூப்பந்தைச் சாணிக் கூடை போட்டு மூடி வைத்த மாதிரி மூச்சுதிணறிப் போனாள் சின்னு பொண்டாட்டி சிறுமிகலுவாயி. ஐந்தாம் நாளே அவன் அடிதாங்காமல் தன் தாய் வீடானக் காக்கிவாடன் பட்டிக்கு ஓடிப்போனாள்" என்று

கூறுவதன் மூலம் கிராமச் சமூகத்தில் ஆணுக்கு இணையாகப் பெண் மதிக்கப்படுவதில்லை என்பதை உணர முடிகின்றது.

## வரதட்சணை

இன்றைய சமூகத்தில் வரதட்சணைத் தலைவிரித்து ஆடுவதைக் காணமுடிகிறது. வரதட்சணைக் கொடுமையால் செல்லத்தாய் துன்பப்படுகின்ற நிலையைக் கள்ளிக்காட்டு இதிகாசம் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

பிள்ளைப்பேற்றுக்காகத் தாய்வீட்டிற்கு வந்த செல்லத்தாயிடம் கணவன் வரவில்லையா? என்று கேட்ட தந்தைக்குச் செல்லத்தாய் பின்வருமாறு கூறுகின்றாள். "பத்துபவுன் வாங்காமப் பெத்த பிள்ளையோட வந்தேன்னா காமக்காபட்டி எல்லையிலேயே கால வெட்டிடுவேங்கறான் ஒன் மருமகன். அவன் எப்படி கூடவருவான்" என்ற கூற்றின் மூலம் பெண்கள் வரதட்சணையால் துன்புறுவதைக் காணமுடிகிறது (Vairamuthu, 2003).

## தீட்டுணர்வு

தீட்டுணர்வு என்பது சமூகத்தில் எவை பொருத்தமற்றவை, எவை செய்யக்கூடாதவை, எவை விரும்பத்தகாதவை, எவைதூய்மை அற்றவை, எவை புனிதமற்றவை என்று நினைப்பவை ஆகும். கிராமங்களில் உயிரிழப்பு நடந்துவிட்டால் ஊரில் நடக்கும் திருவிழாவில் கலந்து கொள்வதில்லை. உயிரிழப்பு நடந்ததைத் தீட்டு என்று கள்ளிக்காட்டு மக்கள் கருதுகின்றனர். பேயத்தேவரின் பேத்தி இறந்ததால் திருவிழா கொண்டாடாத நிலையைக் கள்ளிக்காட்டு இதிகாசம் பின்வருமாறு சித்திரிக்கின்றது.

"பாரப்பா பேத்தி செத்துப் போனதால இந்தவருடம் திருவிழா இல்ல பேயத்தேவர் வீட்டுக்கு" என்ற கூற்றின் மூலம் திருவிழா என்பது புனிதமானது என்றும், உயிரிழப்பு தீட்டு என்றும் கள்ளிக்காட்டு கிராமமக்கள் கருதுவது புலனாகின்றது (Vairamuthu, 2003). தம்மை விட்டுப் பிரிந்து போன உயிருக்காக வருந்துவதோடு அதனைத் தீட்டாகவும் கருதுகின்றனர்.

## சாதிவேறுபாடு

மனிதர்கள் ஒருவரோடொருவர் சேர்ந்து வாழும் இச்சமூக அமைப்பில் பல்வேறு விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. சமூகக் குழுக்களுக்குத் தகுந்தவாறு அவை மாறுபடலாம். ஆனால் பெரும்பான்மையாக அதிகாரம் பெற்ற மனிதர்கள் தங்களுக்குக் கீழ் உள்ளவர்களை அடக்கி ஆளவும், அவர்கள் விதிகளை மீறினால் தண்டிக்கவுமான நடைமுறைகளைக் கைக்கொள்கின்றனர். அதிகாரத்திலுள்ளவர்கள் மட்டும் பொதுச்சொத்துக்களை அனுபவிப்பதும், பிறரை அனுபவிக்க விடாமல் கவனித்துக் கொள்வதுமான ஆளுகையினைப் பெற்றுள்ளார்கள். இத்தன்மை மேலும் மெருகூட்டப்பட்டு வரும் சந்ததிகளும் அதைச் சரியென்று ஏற்றுக் கொள்ளும் வகையில் செய்து விடுகின்றனர். இச்சாதி வேறுபாட்டைக் கள்ளிக்காட்டு இதிகாசம் எடுத்துரைத்துள்ளது. சாதிகளில் உயர்ந்த சாதியார், தாழ்ந்த சாதியாரின் வீட்டில் உணவு அருந்துவதில்லை. உணவு அருந்துவதை இழிவாகக் கருதும் நிலை கள்ளிக்காட்டு இதிகாசத்தில் சுட்டப்பட்டுள்ளது.

"அவுக நம்ம வீட்லயெல்லாம் சுக்குதண்ணிக் குடிப்பாகளா?" என்ற கூற்றின் மூலம் தாழ்ந்த சாதியினர் பயன்படுத்தும் பொருட்களை உயர்ந்த சாதியினர் பயன்படுத்துவது தீட்டு என்று கருதினர். கீழ்சாதியினர் உயர்ந்த சாதியினரால் அடிமைகளாக நடத்தப்படுவதைக் கள்ளிக்காட்டு இதிகாசம் உணர்த்துகிறது (Vairamuthu, 2003).

ஊருக்குப் பொதுவாக உள்ள நீர்நிலைகளில் மக்கள் அனைவரும் நீர் எடுக்க அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால், உயர்சாதியினர் பொது நீர்நிலைகளைச் சுதந்திரமாகப் பயன்படுத்துவதைப் போல்

கீழ்ச்சாதியினர் அந்நீர்நிலைகளை நினைத்தவுடன் பயன்படுத்தி விட முடியாதவாறு சாதிய விதிமுறைகள் முற்காலங்களில் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. இதனைக் கள்ளிக்காட்டு இதிகாசம் பதிவு செய்துள்ளது. பொதுக்கிணற்றில் நீரிறைக்கத் தாழ்ந்த சாதியினருக்கு உரிமை இல்லை என மறுத்தலை, "ஊருக்கெல்லாம் ஒரே ஒரு குடிதண்ணீர் கிணறு; பொதுக்கிணறு அதைப் பொதுக் கிணறுங்கிறது ஒரு பேச்சுக்குத்தானே தவிர அதுல பாவப்பட்ட ரெண்டு மூணு சாதிக்காரவக மட்டும் தண்ணியெடுக்க முடியாது. தோல்தைக்கிற வீடு, சவரம் பண்ற வீடு, வெட்டியான் வீடு" என்று கூறுவதன் மூலம் அறிய முடிகிறது (Vairamuthu, 2003).

மேலும், அவர்கள் கையால் அந்தத் தண்ணீரை இறைக்கவும் கூடாது என்கிற விதிமுறைப் பின்பற்றப் பட்டதனை, "பொம்பளைகள்ளாம் அந்த உருளையில சகடபோட்டு இறைச்சுற முடியாது. தண்ணிக்கெணத் தோரமாக் கொடத்த வச்சுக் குத்தவச்சு ஒக்காந்திருப்பாக. தண்ணி எறைக்க வர்ற பொம்பளைகள்ள யாரோ ஒரு இரக்கமுள்ள மகராசி தன் குடத்த நிறைச்சுட்டு அவுக குடத்தையும் நிறைச்சுட்டுப் போவா. அன்னைக்கு அந்த மகராசி யாருங்கிறது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்" (வைரமுத்து - 2003) என்று கூறுவதன் மூலமும், ஒருவேளை பொதுக்கிணற்றில் நீரிறைக்க முற்பட்டால் என்னவாகும் என்ற கேள்விக்குப் பதிலாக, "முருகாயி வீட்டு ஆளுகளுக்கு ஒருமாசம் தண்ணி ஊத்தாம ஊரே ஒதுக்கி வைக்கிறது" என்று ஊர்ப்பெரியவர்கள் கூடிக் கிடைக்கிற கொஞ்சக் குடிதண்ணீரையும் கிடைக்கவிடாமல் செய்வதன் மூலமும் அடித்தட்டு மக்களின் தீண்டாமை நிலையை அறிய முடிகிறது (Vairamuthu, 2003).

## சடங்குமுறைகள்

பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் வாழ்க்கை பல்வேறு சடங்குகளால் கட்டுண்டு இருப்பதைக் காண முடிகிறது. கிராம மக்களிடையே பல்வேறு சடங்குகள் காலங்காலமாக வழக்கில் இருந்து வந்துள்ளன. கள்ளிக்காட்டு இதிகாசத்தில் பிறப்புச்சடங்கு, திருமணச்சடங்கு, இறப்புச்சடங்கு ஆகிய சடங்குகள் இடம்பெற்றுள்ளன.

## பிறப்புச்சடங்கு

குழந்தை பிறந்தவுடன் முதன்முதலில் விளக்கெண்ணெய் அல்லது சர்க்கரை கலந்த நீரைச் சிறிய கரண்டி அல்லது சிறிய குச்சியில் துணியைச் சுற்றி எடுத்துக் குழந்தையின் நாவில் இடுவர். இதனைச் சேனை வைத்தல் என்பர். முதன்முதலில் சேனைவைப்பவர் செல்வத்திலும் கல்வியிலும் சிறப்புடையவராக இருக்க வேண்டுமென்று அனைத்துச் சமுதாயத்தினரும் விரும்புகின்றனர். அத்தகையவர் சேனைவைத்தவுடன், பின்பு குழந்தையின் தந்தை வழிப்பாட்டன், பாட்டி, தாய்வழித் தாத்தா, பாட்டி, தாய்மாமன் எனஅனைவரும் சேனை வைப்பர்.

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் பேயத்தேவரின் மூத்தமகள் செல்லத்தாயிக்குப் பிறந்த குழந்தைக்குச் சேனை தொட்டு வைக்கும் சடங்கு செய்யப்படுவது பதிவு செய்யப்பட்டுள்ளது. "வசம்பின் நுனியில் எண்ணெய் தொட்டு குழந்தையின் வாயில் மூன்று முறை வைப்பார்கள் மூத்தவர்கள். ஒவ்வொரு முறை தொட்டு வைக்கும் போதும் ஒம்புத்தி போயி எம்புத்தி வா என்று சொல்லி வைப்பது மரபு" என்று கூறுவதன் மூலம் உணர முடிகிறது (Vairamuthu, 2003).

## திருமணச்சடங்கு

மனித வாழ்க்கையில் திருமணம் என்பது முக்கிய ஒன்றாக உள்ளது. மணமுறைகளைப் பண்டையத் தமிழர் வதுவை (Jeyabal, 2004), மன்றல் (Viswanathan, 2004) என்றும், "மறையோர் தேயத்து மன்றல் எட்டினுள்" என்றும் குறிப்பிட்டுள்ளனர் (Subramaniyan, 2010). திருமணம் மதம், இனம், பண்பாடு, மனப்பாங்கு ஆகியவற்றிற்கு ஏற்ப மாறுபடும் இயல்பினது என்று கா. காந்தி குறிப்பிடுகின்றார். திருமணங்கள் இன்று நகரமயமாக்கல் காரணமாக அனைவரும் கலந்து கொள்ளுவதற்கு ஏற்ப காலையிலோ அல்லது இரவிலோ நடத்துகின்றனர். ஆனால் கிராமங்களில் பகல்வேளையில் தான்

அதிகமாகத் திருமணங்கள் நடைபெறுகின்றன. கள்ளிக்காட்டில் இரவில் திருமணம் நடைபெற்றதை "பகல் முகூர்த்தமெல்லாம் வசதிப்படாது. அவரவர்கள் வேலை முடித்துக் காத்தாட வந்து சேர ராத்திரிக் கல்யாணந்தான் லாயக்கு" என்ற கூற்றின் மூலம் அறிய முடிகிறது (Vairamuthu, 2003).

மக்களின் வாழ்க்கை வசதிக்கேற்பச் சில மரபுகள் மாற்றம் பெற்றுள்ளன என்பதைக் கள்ளிக்காட்டு இதிகாசம் புலப்படுத்துகிறது. திருமணத்தின் போது மணப்பெண்ணை வாழ்வரசிகள் சூழ அழைத்து வருதல், மணமக்களைத் திருமணப்பந்தலில் கிழக்குப் பார்த்து அமரவைத்தல் போன்ற சடங்குகள் நடைபெற்றன." கொட்டுச்சத்தம் ஊர்பிளக்க-குலவைச்சத்தம் வான்கலக்க பாறைகள் கசிவது போல் பேயத்தேவரும் அழகம்மாவும் கண்கசக்க தாலிகட்டி, மாலைமாற்றி ஊர்பெருசுகளின் காலில் விழ, அவர்கள் மணமக்களுக்கு நெற்றியில் திருநீறு இழுக்கி விட முடிந்தது சடங்கு" என்ற கூற்றின் மூலம் கள்ளிக்காட்டில் நடைபெற்ற திருமணச் சடங்கைப் பற்றி அறிய முடிகிறது (Vairamuthu, 2003).

## இறப்புச்சடங்கு

இறப்பு என்பது மனித வாழ்க்கையில் தவிர்க்க இயலாதது. உடலில் உயிரின் செயல்பாடு நிற்றல் ஆகும். இறப்பின் போது பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. பேயத்தேவரின் மனைவி அழகம்மாவின் இறப்பு எதார்த்தமாகச் சுட்டப்பட்டுள்ளது. கள்ளிக்காட்டில் பிணங்களுக்குச் செய்கின்ற சடங்குகளை இறந்த அன்று செய்யும் சடங்குகள், சுடுகாட்டில் செய்யும் சடங்குகள், புதைத்தப் பின் செய்யும் சடங்குகள் என மூன்று நிலைகளாகச் சுட்டப்பட்டுள்ளன.

இறப்புச் செய்தியினை ஆள்விட்டு உறவினர்களுக்குச் சொல்லுதல், பந்தல்காரன், கொட்டுக்காரன் என அனைவருக்கும் தகவல் சொல்லும் மரபு சுட்டப்பட்டுள்ளது. பிணத்தினை மூத்த மகளை விட்டுக் குளிப்பாட்டுதல், அலங்காரம் செய்தல், தலைமாட்டில் ஊதுவத்தி கொளுத்தி வைத்தல், நெற்றியில் காசுவைத்தல் போன்ற நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன. இறப்புச்சடங்கில் நீர்மாலை எடுத்தல் மிகவும் முக்கியமான சடங்காகும். கள்ளிக்காட்டு இதிகாசம் இருவகையான நீர்மாலைகளைப் பதிவு செய்கிறது. பெண்கள் மூத்தமகளுடன் ஊர் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது பொம்பளைக நீர்மாலை என்றும் ஆண்கள் ஆற்றிலோ, கிணற்றிலோ இருந்து நீர் கொண்டு வருவது ஆம்பளைக நீர்மாலை என்றும் கூறப்பட்டுள்ளது. நீர்மாலை கொண்டுவந்த பின்பு இரண்டாவது முறையாகப் பிணத்தைக் குளிப்பாட்டும் மரபும் அதற்குப் பிறகு பிறந்த வீட்டுக்கோடியினை உடுக்குமாறு செய்வதும் மூங்கிலால் செய்யப்பட்ட தேரில் பிணத்தை உட்கார வைத்துச் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்வதும் சுட்டப்பட்டுள்ளது. இறப்புச்சடங்கில் மக்கள் கலாச்சாரத்தில் இருந்து வேறுபடும் வகையில் கள்ளிக்காட்டில் பெண்கள் இடுகாட்டில் கொல்லிக்குடம் உடைக்கும் வழக்கம் காணப்படுவதைக் கள்ளிக்காட்டு இதிகாசம் பதிவு செய்கிறது. இதனை "அம்பலத்தில் தேரிறக்கி அரளிப் பூச்சூறையிட்டுச் செல்லத்தாயிகுடம் சுமந்து மூன்று முறை சுற்றிவர அரிவாள் மூங்கில் ஒவ்வொரு சுற்றுக்கும் ஒவ்வொரு துளைப்போட்டு மூணாம் சுத்துல கொடம் ஒடச்சுத் திரும்பிப் பார்க்காம நடதாயி" என்று நாவிதன் கூறுவதன் மூலம் உணர முடிகிறது (Vairamuthu, 2003).

## முடிவுரை

கள்ளிக்காட்டு இதிகாசம் கள்ளிக்காட்டில் வாழும் மக்களின் வாழ்கை முறைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. கிராமப்புறங்களில் இன்றும் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் நடத்தப்படுவதில்லை என்பதும் சாதியத்தினால் உயர்ந்தோர் முன் தாழ்ந்தோர் நடந்து கொள்ளும் இழிவான நிலை, சாதிய வேறுபாடுகள், வரதட்சணைக் கொடுமைகள், கணவன் மனைவி உறவு, குடும்பப் பிரச்சினை போன்றவைக் கிராமத்தில் இன்றும் நடைமுறையில் உள்ளதைக் காண முடிகிறது. இத்தகையப் பிரச்சினைகளையும் மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து கிடக்கும் பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் சடங்குகள் பற்றியும் கள்ளிக்காட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறைகள் பற்றியும் கள்ளிக்காட்டு இதிகாசத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

## References

Annai Sri Aanantha Naachiyaramma, (2017) Manu Neethi Sasthiram, Sri Indu Publications, Chennai, India.

Jeyabal, R., (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Subramaniyan, S.V., (2010) Tholkappiyam thelivurai, Manivasakar Pathippagam, Chennai, India.

Vairamuthu, (2002) Kallikattu Ethikasam, Thirumagal Nilaiyam, Chennai, India.

Viswanathan, A., (2004) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License